3/9/1951 M.V.M M BANGALORE, 2


# போர்வாள்

வாள் 5 வீச்சு 1

1-9-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
ப. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா


# ஆறுமுகத்தின் அகோர மரணம்

## கள்ளமார்க்கெட் கழுகுகள் கொத்திக்கொன்றன


★

நெல்லை ஜில்லா முடிந்தா னேந்தல் கிராமத்திலுள்ள கோ—ஆபரேடிவ் ஸ்டோரின் ஊழல்களையும், நடந்த கள்ளமார்க்கெட்டையும் அம்பலப்படுத்தி வெளிக்கொணர்ந்த காரணத்திற்காக ஸ்தல சோஷலிஸ்டு கட்சி யூனிட் காரியதரிசி தோழர் ஆறுமுகம் இருகைகளும் வெட்டப்பட்டு 27—7—51-தேதியன்று படுகொலை செய்யப்பட்டார். கொலைசெய்தது ஸ்தலகாங்கிரஸ்காரனும், ஷை ஸ்டோர் காரியதரிசியுமான முத்துசாமி எனவும் தெரியவருகிறது.

ஆகஸ்டு 12,13 தேதிகளில் கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு சோஷலிஸ்டு கட்சியின் மகாநாடு இதைக் கண்டித்து நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் "போதிய சாட்சியங்கள் இருந்தும் ஸ்தல அதிகாரிகள் ஒரு தலைப்பட்சமாக சதிகாரர்களுக்கு ஆதரவாக நடந்துகொண்டதை பலமாக ஆட்சேபித்து" கண்டித்துள்ளது.

மேலும் 26-8-51-ம் தேதி தமிழ்நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தி முடித்தானேந்தல் தோழர் ஆறுமுகத்தின் கொலையைப் பற்றி பகிரங்க விசாரணை செய்து கொலைகாரர்களை கைது செய்தும் பாரபட்மாக நடந்துகொண்ட அ காரிகளின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவு கோரி தமிழ்நாடு சோ

(13-ம் பக்கம் பார்க்க)



# எரியும் பிணத்தை நடைப்பிணம் தின்கிறது

## காங்கிரஸ் ஆட்சியில் கண்கண்ட உண்மை.

(சம்சு)

நண்பகல். கதிரவனின் கொடூர ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. தனது சர்வாதிகாரத்தைச் சிறிதளவாவது தளர்த்திக்கொள்ளாத பகலவன் வெண்கதிர்களை வீசிய வண்ணம் வானவீதியிலே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறான். மக்கள் தத்தம் அலுவலிலே கவனம் செலுத்துகின்றனர்.

அதோ ஒரு எலும்புக்கூடு! நடைப்பிணம் நடந்துகொண்டிருக்கிறது. வெய்யிலின் வேகம் அதன் நடையைத் தடைபடுத்த முடியவில்லை. எலும்புரு நடக்கிறது. ஊரின் கோடிக்குச்செல்லுகிறது. தூரத்திலே கொழுந்துவிட்டெரியும் நெருப்பு தெரிகிறது. நடைப்பிணத்தின் முகத்திலே ஒருவித மகிழ்ச்சி மலருகிறது. நெருப்பை நெருங்கிற்று நடைப்பிணம். பிணம் ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. நடைப்பிணம் அங்கும் இங்கும் பார்க்கிறது. எரிந்துகொண்டிருக்கும் பிணத்தின் உடலிலிருந்து ஒரு பகுதியை எடுக்கிறது. என்ன கொடூரம்! நடைப்பிணம் எரியும் பிணத்தின் இறைச்சியைக் கடித்துத் தின்கிறது. பக்கம் இருந்த பருந்து பறந்தது. கழுகு சிறகடித்து விரைந்தது.

சற்று தொலைவிலிருந்த மக்கள் கூட்டம் இக்கோர நிகழ்ச்சியைப் பார்த்துப் பதறி ஓடி நடைப் பிணத்தைத் தடுத்து நிறுத்தியது. நடைப் பிணம் கையில் கிடைத்த தங்கப்பேழையை இழந்துவிட்டதுபோல் விழித்தது. மனிதமாமிசம் தின்னும் அந்த மனிதன் இழுத்து வரப்பட்டு போலீஸார் வசம் ஒப்புவிக்கப்பட்டான்.

போலீஸார் அதட்டினர், அடி தருவதாக மிரட்டினர், உருட்டுவிழிகளால் பார்த்தனர்.

நடைப்பிணம் கேலிச் சிரிப்பு சிரித்தது. பிறகு பேசியது, "நாலைந்து நாட்களாய் உண்ண உணவில்லை. முடிவில் உணவு, சுடுகாட்டில்தான் கிடைக்குமென வந்தேன். என் வரவும் வீண்போகவில்லை. உணவும் கிடைத்தது. ஆனால் சரியாய்ப் புசிப்பதற்குள் மக்கள் பிடித்து உங்கள் கையில் ஒப்படைத்துவிட்டனர்."

போலீஸார் ஒரு கணம் ஸ்தம்பித்துவிட்டனர். பிறகு அவனுக்கு உணவளித்து அவர்களது கண்காணிப்பிலே வைத்தனர்.

இந்தப் பயங்கரக் கற்பனை 'அராபிய இரவு'களிலே யாராவது மாந்தரீகன் செய்வதாகத்தான் இருக்கும், அல்லது ஏதாவதொரு நவீனத்திலே வரும் இச்சம்பவம் என்றுதான் எண்ணத்தோன்றும் எவருக்கும். இல்லை! இல்லை!!

நிகழ்ச்சி உண்மையிலேயே நடந்திருக்கிறது. அதுவும் புண்யபூமி, சுவர்க்க வாசல் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் இந்தியத் துணைக்கண்டத்தின் தென் பகுதியிலே! காவிரியும், தென்பண்ணையும், பாலாறும் ஓடும் தமிழகத்தில்! நஞ்சையையும் புஞ்சையையும் தன்னகத்தே கொண்ட தமிழகத்தில்!

ஆச்சரியம் ஆனாலும் உண்மை.


ஆகஸ்ட் திங்கள் மூன்றாம் நாள் திருக்கோவிலூர் என்ற இடத்திலே, பசியால் வருந்திய இருபது வயது வாலிபன், சுடுகாடு ஏகி, வெந்துகொண்டிருந்த பதினைந்து வயது வாலிபனின் சதையைச் சிதைத்து உண்ணுவதைப் பார்த்த மக்கள், அவனைப் போலீஸார்வசம் ஒப்புவிக்க, அவர்களும் விசாரித்தனர். அவன் "பசி" என்று பதில் கூறினான். போலீஸார் உணவளித்து அவனைத் தம் கண்காணிப்பில் வைத்தனர்.

எவ்வளவு பயங்கர சோக நிகழ்ச்சி. மனிதனையே மனிதன் உண்ணும் நிலை! கத்தாழை, புளியங்கொட்டை, விஷக்கிளை இலைகளுக்கு அப்பால் மனிதனே மனிதனுக்கு உணவாகிறான். மனிதன் கழுகாக மாறுகிறான். கேட்கவே சகிக்க முடியாத சம்பவம். ஆனாலும் நடந்திருக்கிறது நாட்டிலே. நெஞ்சம் புண்ணாகிறது.

உணவுப் பஞ்சத்தினால் ஏற்பட்ட விளைவுகளிலே அதிபயங்கரமானது திருக்கோவிலூர் நிகழ்ச்சி. வீதியிலே பசியால் வருந்தி மடிந்துகிடந்த பிணம்! நகராட்சி மன்றத்தின் பக்கம்

(10-ம் பக்கம் பார்க்க)

புதிய தொடர் கதை:—




நான்காம் பகுதி

## குஷ்டரோகி

அடுத்த நாள் காலை!......

கதிரவன் தன் ஒளிக்கற்றைகளை பாய்ச்சிக் கொண்டிருந்தான். அதை அந்தக் காட்டில், மரக்கிளைகளின் இடுக்குகளின் வழியாக ஊடுருவி வந்து தரையை முத்தமிட்டுக்கொண்டிருந்தன.

ஒரு பெரிய மரத்தடியிலே உட்கார்ந்து கொண்டு வண்ணக் குழம்புகளைக் கலக்கிக் கொண்டிருந்தான் ஓவியன். பல வண்ணக் குழம்புகள் அங்குப் பாத்திரங்களில் ஊற்றி வைக்கப்பட்டிருந்தன. ஓவியக் கோல்கள் அவைகளின் அருகே இருந்தன. சித்திரமெழுத வேண்டிய அழகுத்துணி, சட்டமிடப்பட்டு அந்த மரத்தின் மீது சாத்தப்பட்டிருந்தது. சிற்றெலிகள் சித்திரக்காரனை ஏமாற்றிக் கொண்டிருந்தன!—சிங்காரியின் காலடிச் சத்தங்களைப் போல ஒலியெழுப்பின அவை!...

"டக்...டக்...டக்...டக்..."

குதிரையின் குளம்படிச் சத்தம்! சத்தம் வரவர அதிகமாகக் கேட்டது. குதிரை வீரன் ஓவியனை நெருங்கிக் கொண்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது ஓவியனுக்கு! முகத்தில் முகமூடி! கையில் சாட்டை! இடையில் உறைவாள்!...

"டேய்!...நீ யார்?..."—முகமூடிக்காரன் கேட்டான்.

"நான்...ம்... ஒரு ஓவியன்!..."

'ஓவியனா?...உட்கார்ந்த இடத்திலிருந்தே வயிற்றை வளர்க்கும் உலுத்தனா?..."

"இல்லையில்லை. உம்மைப்போன்ற உழைப்பாளி தான் நான்!...நீர் போர்வாளைச் சுழற்றுகிறீர்! நான் ஓவியக்கோலைச் சுழற்றுகிறேன்!... நீர் எதிரிகளைப் பிணங்களாகக் குவிக்கிறீர்! நான் எல்லோரையும் பரவசப் படுத்துகிறேன். நீர் அழிக்கிறீர்! நான் படைக்கிறேன்! நீர் நாட்டிற்குத் தொண்டாற்றுகிறீர்! நான் கலைக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றுகிறேன்! நீர் உழைப்பிற்கேற்ற ஊதியமும் புகழும் பெறுகிறீர்! நான் அவைகளை சிற்றளவில பெறுகிறேன்!......ஆனால் இருவரும் உழைப்பாளிகள்!..."

"டேய்!......ஏதேதோ... ...பேசிக் கொண்டே போகிறாயே!...தளபதி பரிவின்பனை உனக்குத் தெரியுமா?..."

"தெரியும்..."

"இப்பொழுது அவன் எங்கேயிருக்கிறான்? எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? ...மறைக்காமல் சொல்லிவிடு!..."

"ஆச்சரியமாயிருக்கிறதே!...பரிவின்பனா பதுங்கிக் கொள்பவர்?... புலியிடம் அதற்கு நேரிட இருக்கும் பேராபத்தைப் பிரஸ்தாபித்தாலும் அது பதுங்கி ஒளியுமா?..."

"வார்த்தைகளை வளர்க்காதே! வேங்கையின் முன் விருத்தம் பாடாதே!...வேம்பாயிருக்கின்றன அவை எனக்கு!... அந்தப் பயல் எங்கே?..."

"எனக்கு நிச்சயமாகத் தெரியாது!..."

"நீதானே அவனுக்கு இளவரசியின் படத்தை வரைந்து தந்தவன்?..."

"ஆம். நான் தான்."

"ஆஹா! அற்புத ஓவியம்!.." ஓவியரே!...ஒரு உதவி உம்மாலாக வேண்டும்!..."

"என்ன?..."

"...'செய்கிறேன்' என்று முன் கூட்டியே சொல்லும்!.....அப்பொழுதுதான் நான் அதைக் கேட்பேன்!.."

"செய்ய முடிந்ததாக, செய்யத் தக்கதாக அது இருந்தால் தவறாது செய்கிறேன்!..."

"ஆம். அந்தப்பயல் பரிவின்பன்!...உண்ட வீட்டிற்கு ரெண்டகம் செய்தவன்! அரசவம்சத்தில் அடியெடுத்துப் பார்க்க முனைந்த ஆண்டிப்பயல்!...நேற்று கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்! இன்று சிறையிலிருந்து தப்பி ஓடியுள்ளான்!...நிச்சயமாக உம்மிடம் வருவான்! நீர் அவனிடம் பேசிக்கொண்டிருந்து எனக்குச் சைகை காட்டினால் நான் அவனைப் பிடித்துக் கொன்றுவிடுவேன்!...ஆம். இந்த உதவியை நீர் எனக்குச் செய்தாக வேண்டும்!... நான் யாரென்று தெரிகிறதா? இளவரசியின் தாய் மாமன்! நெய்தல் நாட்டின் வருங்கால மன்னன்!..."

"அஹ்ஹஹ்ஹஹ்ஹா! உதவி!... வீரன் கேட்கும் உதவியா இது?... துள்ளியோடும் புள்ளிமானை கட்டிப் பிடிக்கத் திறமையில்லாத சிங்கம், குள்ளநரியின் உதவியை அந்த மானிடம் வலைவீசக் கேட்டதாம் தன் வயிற்றுப் பசிக்கு அமுதாகக் கொணரச் சொன்னதாம்! அதைப் போலல்லவா இருக்கிறது இது?... என்னையென்ன கள்ள நெஞ்சம் படைத்த நயவஞ்சக நரியென்று எண்ணிவிட்டீர்?...தப்பியோடினவனைப்பிடிக்கத் திறமையற்றவரா நெய்தல் நாட்டின் வருங்கால மன்னர்!......ஐயா! அந்த உதவியை— ஆம் துரோகத்தை— நான் செய்ய மாட்டேன்!.."

"டேய்!...இங்கே பார்!..." தன் கையிலிருந்த சாட்டையினால் ஒரு பேரிரைச்சலை யுண்டாக்கினான் முகமூடி வீரன்! ஓவியன் புன்முறுவல் புரிந்தான்.

(14-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவை ஆட்டிவைக்கும் உத்தர பிரதேசம்!

## உத்தர பிரதேசம் ஓர் வால் நட்சத்திரம்!

★

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலில் உத்தர பிரதேசம் ஓர் முக்கிய பங்கை ஏற்றுக் கொண்டு இருக்கிறது. விடுதலை போராட்ட காலத்தில் இருந்தது போலவே, இன்றும் உத்தர பிரதேசத்திற்கு, இந்நாட்டு அரசியலில் ஆதிக்கம் இருந்து வருகிறது. இந்த ஆதிக்கம், எதிர்காலத்தில் மேலும் கூடுதலாகும்.

இந் நாட்டில் தலையெழுத்து புதிய டெல்லியிலிருந்துதான் நிர்ணயிக்கப்படுகிறது என்று பொதுவாக நம்பப்படுகிறது—சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. திட்டங்கள் உத்தர பிரதேசத்தில் உருவாக்கப்படுகின்றன. அத்திட்டங்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் புது டெல்லியால் நடைமுறைக்குக் கொண்டுவரப் படுகின்றன. இதுவே உண்மை நிலையாகும்.

உத்தர பிரதேசத்தின் வடக்கு எல்லை நேபால். மத்திய பாரத் தெற்கே கிழக்கிலும் மேற்கிலும் முறையே பீகாரும், பாஞ்சாலமும் ராஜஸ்தானும் இருக்கின்றன.

காசி, டேரி, சிரெவால், ராம்பூர் முதலிய சுதேச சமஸ்தானங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, முன்னாள் ஐக்கியமாகாணம் இன்றைய உத்தர பிரதேசமாகக் காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றன. அதன் நிலப்பரப்பு 109000 சதுர மைல்கள் அங்கு மொத்தம் குடியிருக்கும் மக்கள் கோடி.

அங்கு சுமாரான மழை உண்டு. நீர்ப்பாசன வசதிகள் ஏராளம். முந்தியதால் ஏற்படும் குறைபாட்டைப் பிந்தியது நேர் செய்துவிடுகிறது. இதன் விளைவாக, அங்கு அதிகமான நிலப்பரப்பு சாகுபடிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறது. எனவே, உணவு உற்பத்தியில் அந்த இராஜ்யம் ஓர் உபரி இராஜ்யமாக இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் அபின் உற்பத்தி செய்யும் ஒரே ஒரு இராஜ்யம் இருக்கிறது என்றால், அது உத்திர பிரதேசம்தான். உணவு உற்பத்தியில் உபரி இராஜ்யமாக இருப்பதுடன், இயந்திரத் தொழில் வளத்திலும் உத்தர பிரதேசம் முதன்மையாக இருக்கிறது. கல்கத்தா பம்பாய்க்கு அடுத்தபடியாக, நாட்டில் தொழில் வளமிக்க பகுதிகளில் மிகச் சிறந்ததாக கான்பூர், இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற எல்லா இராஜ்யங்களைவிட உத்தரபிரதேசத்தில்தான் அதிகமான நகரங்கள் இருக்கின்றன. ஆக்ரா, அலகாபாத், காசி, கான்பூர், லக்நௌ, ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 2500000 மக்களுக்கு அதிகமாக இருக்கின்றனர். அங்கு ஐந்து பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. உத்தர பிரதேசத்தில்தான் அதிகமான மைல்கள் புகை வண்டித் தொடர் செல்லுகிறது.

இவ்வளவு இயற்கை செயற்கை வளமிருந்தும்கூட, உத்தர பிரதேசத்தில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் ஏழைகள் — பரம ஏழைகள். தேகத்தில், சுகத்தில், வாழ்க்கை வசதிகளில் ஆக அனைத்திலும் அங்குள்ளவர்களில் அதிகப்படியானவர்கள் ஏழைகள்—மிகமிக ஏழைகள்.

அங்கு இயற்கைவளம் இருக்கிறது—தொழில் வளம் இருக்கிறது — இருந்தாலும் அங்குள்ள மக்கள் வாழ்க்கை வசதிகளைப் பெற முடியாமல் வறுமையால் தாக்குண்டு, வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாமல் தாங்கிக்கொண்டு காலங் கழித்து வரும் கேவல நிலைமை இருக்கிறது—ஏன்?

இந்தியாவின் நடைமுறை அரசியல் கேந்திர ஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கிறது உத்தர பிரதேசம். இங்கு இருந்து இயக்கப்பெறும் சூத்திரக் கயிற்றின் அசைவால், புது டெல்லியின் மூலமாக, இந்திய பூபாகமே ஆட்டம் கொடுக்கிறது. அந்த அளவு அரசியல் ஆதிக்கம் உத்தர பிரதேசத்தினிடம் சிக்கிக்கொண்டு இருக்கிறது.

இந்தத் தேசத்தை ஆட்சி புரிந்துகொண்டு இருப்பது காங்கிரஸ் கட்சி. ஆட்சித் தலைவர் பண்டித ஜவகர். ஆனால், காங்கிரசை இயக்கிக்கொண்டு இருப்பவர்கள் புருஷோத்தம தாஸ் தாண்டனும், அவரையொத்த மக்களும்தான். இந்தக் கும்பலும், காங்கிரசில் ஆதிக்கம் செய்வோரில் பெரும்

பான்மையோரும் உத்தர பிரதேச வாசிகளே யாவர். இந்தக் கும்பலுக்கு காங்கிரசிலும், நாட்டு அரசியலிலும் எந்தவிதமான ஆதிக்கம் இருந்து வருகிறது என்பதை தொலைவில் இருப்பவர்களால் புரிந்து கொள்ள முடியாது. உத்தர பிரதேசத்திற்கு ஒரு முறை யாத்திரை சென்று பிரத்தியட்ச நடைமுறைகளில் கருத்தைச் செலுத்தி ஆராய்ந்தால் தான், இந்தக் கும்பலிடம் சிக்கியுள்ள அரசியல் ஆதிக்கத்தின் உண்மையான தன்மையை உணர்ந்துகொள்வது சுலபமானதாகும்.

இந்த சூழ்ச்சிக் கும்பலின் கை மேலோங்கி இருப்பதின் பலனாகத்தான், காங்கிரஸ் குறுகிய நோக்கங்கொண்ட, சகிப்புத்தன்மையற்ற, பிற்போக்கு ஸ்தாபனமாக மாறி வருகிறது. ஒரு காலத்தில் காங்கிரஸ் பொது மக்களின் ஸ்தாபனமாக இருந்தது. ஆனால், இப்பொழுது, குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தாரின் ஸ்தாபனமாக, காங்கிரஸ் மிக வேகமாக மாறிக் கொண்டு வருகிறது.

இந்தக் குறிப்பிட்ட வர்க்கத்தில் எவர் எவர் இருக்கின்றனர்? இவர்களுடைய பண்பாடு என்ன? இவர்களுடைய நடவடிக்கையால் பொது மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகள் எவை எவை?

இக் கும்பலுக்கு, இச் சூதுமதியினருக்கு, பொதுமக்கள் நலன்களைக் குறித்து ஒரு சிறு கவலையும் கிடையாது. சொந்த இலாபம்தான் இக் கும்பலின் குறிக்கோள். சீன மக்களின் வாழ்வைச் சூறையாடி வந்த கோமிண்டாங் கும்பலுக்கும் இக்கும்பலுக்கும் எந்த ஒரு வகையிலும் வேற்றுமை கிடையாது. சிறுகச் சிறுக பலம் பொருந்திய கும்பலாக இது மாறி வருகிறது.

துவக்கத்தில், இக்கும்பல், சூதறிய பின் பற்றும் மக்களையும், நல்லவர்கள்போல் நடித்துக் காலத்தை எதிர் நோக்கிக் கிடக்கும் வஞ்சகர்களையும் கயவர்களையும் கொண்டிருந்தது. ஆனால், காலப்போக்கில், பிந்தியவர்கள் தங்களுடைய நிலையை நன்கு வலுவாக்கிக் கொண்டனர், நேர்மையாளர் எவரும் அவர்களுடைய விவகாரங்களில் குறுக்கிட்டு அவர்களுடைய திருவிளையாடல்களைக் கண்டு பிடிக்க முடியாத தன்மையில்!

இதே போக்கில்தான் இன்றைய காங்கிரசின் நிலையும் இருக்கிறது. முன்னொரு காலத்தில் காங்கிரஸ் பொதுமக்களின் ஸ்தாபனமாகவும், உழவர்களின் உறைவிடமாகவும் இருந்தது போய், இன்று, நாட்டுப் பற்றை வாணிபப் பொருளாக மாற்றி பேரும் பேசும் வஞ்சகர்களும், கள்ளச் சந்தையால் கொழுத்துப் பெருக்கும் தொழில் அரசுகளும் ஆதிக்கம் செலுத்தும் அரக்கு மாளிகையாகிவிட்டது. இந்த உண்மை உத்தர பிரதேசத்தில் உள்ளங்கை நெல்லிக் கனி எனத் தெளிவாகத் தெரிகிறது.

தேர்தல் நெருங்கி வருகிற இத்தருணத்தில், காங்கிரஸ் கழுகுகளைக் குடைந்துகொண்டு இருக்கும் பிரச்சினை, தேர்தல் செலவிற்கு வேண்டிய பணத்தைப் பற்றியதாகப் போய் விட்டது. இச் சமயத்தில் நிலப் பிரபுக்கள் அள்ளிக் கொடுக்க மாட்டார்கள் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு இருப்பதால், காங்கிரஸ் கழுகுகளின் கூர்மையான பார்வை தொழில் அரசுகளின் மடியைக் கூர்ந்து நோக்குகிறது. இதற்குத் தொழில் அரசுகளும் தங்கள் ஒத்துழைப்பைத் தர ஆர்வத்தோடு முன் வருகின்றன. குறிப்பிட்ட ஒரு தொழில் வட்டத்தில் மட்டும் முக்கால்கோடி ரூபாய் வசூல் செய்ய இக்கழுகுகள் திட்டமிட்டு இருக்கின்றன. இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பது அரிதான சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொள்ள, 'நாட்டுப் பற்று' நிரம்பிய தொழில் அரசுகளும் தயாராகவே இருக்கின்றன. 'சில சலுகைகள்' பிரதிபலனாகப் பெறுவதற்காக, தேவைக்கு இரட்டிப்பாகப் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் அவர்கள்.

தொழில் அரசுகளின் பேரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர்கள் கேட்ட சலுகை என்ன என்பதை அறிந்து கொள்வது கஷ்டமல்ல.

லட்சக்கணக்கான கஜம் துணிகள், வழக்கமான முறையில் விற்பனைக்கு அனுப்பாமல், சொந்தத்தில் விற்றுப் பணமாக்கிக் கொள்வது அல்லது உற்பத்திக் கணக்கில் குறிப்பிடாத சில ஆயிரம் டின் வனஸ்பதியை விற்றுக் கொள்ள அனுமதிப்பது போன்ற மிகச் சாதாரண சலுகைகளை பெறுவதாக இருக்கலாம். அவ்வளவுதான். இந்நிலையிலும் கள்ளச் சந்தைக்கு எப்படி பொருள்கள் போகின்றன, எப்படி இத்தகு ஆபாச நடத்தைகள் செழுமையாக வளர்ந்து வருகின்றன, விலைகள் கூடுகின்றன, மக்கள் அவதியுறுகின்றனர், என்பவற்றை அறிந்து கொள்வது கஷ்டமானதாகவா இருந்து வருகின்றன?

காங்கிரஸ் கழுகுகளுக்கும், கள்ளச் சந்தை தொழில் சீமான்களுக்கும் ஏற்பட்டு இருக்கிற கூட்டு ஒப்பந்தத்தில், காங்கிரஸ் சார்பில் பங்கு கொண்டவர் உத்

(13-ம் பக்கம் பார்க்க)

# புதுமைப் பெண்

[ஏர்வாடி. ஆ. மீ. அலிசேக் மன்சூர்]

மாலைப் மணி இருக்கும் வ. உ. சி பூங்காவின் ஒரு மூலையில் அவள்—பூங்கொடி— அமர்ந்திருந்தாள். அவளது கையில் 'ஓரிரவு' வசன புத்தகம் காட்சியளித்தது.

பெண்களின் வாழ்வு ஆடவர் கூட்டத்தால் சீரழிக்கப் படுவதை எண்ணிக் கொண்டிருந்தாள் அப்பொழுது அவள் முகம் சிவந்திருந்தது. அவள் ஒரு இலட்சியவாதி. அவளது தோழன் சிதம்பரம் அங்கு இன்னும் சிறிது நேரத்தில் வருவான் என்பது அவளுக்குத் தெரியும். தன்னையும் சிதம்பரம் கைவிட்டு விடுவானே என்று அவள் ஒரு கணம் எண்ணினாள் அவளது முகம் இன்னும் அதிகமாகச் சிவக்க ஆரம்பித்தது. சிதம்பரத்தையும் அவளால நம்ப முடியவில்லை. அப்பொழுது அந்த சிதம்பரம் வருகின்றான்.

'பூங்கொடி' சிதம்பரம் அழைத்தான்.

"வாருங்கள்" அவள் முகத்தை மற்றொரு பக்கமாய்த் திருப்பிக் கொண்டாள்.

"வரவேற்கும் முறை...."

'சரியாகத் தானிருக்காது. ஆடவர்களைப் பற்றி எண்ணிவிட்டேனல்லவா?'

'பனிச் சோலைக்குயிலே மந்தமான தென்றற் காற்று வீசும் இந்த உல்லாசமான நேரத்தில் பொறி வீசும் வார்த்தைகளால் உள்ளத்தை ஏன் புண்ணாக்குறாய் பூங்கொடி, உலகம மிக மிகப் பொல்லாதது தான்...."

"உங்களைப் போன்றவர்கள் வாழ்வதால்தான்"

"நீ தப்புக் கணக்கு போடுகிறாய் பூங்கொடி என் மனம...'

"வண்டைப் போன்றது"

"உண்மையாகவா?"

"ஆடவர் சமுதாயத்தின் பொதுமைக் குணமல்லவா அது."

"பூங்கொடி, நீ பேசுவது...?"

"அர்த்தமற்ற வீண் வாதமல்ல. அபலைப் பெண்கள் சிந்தும கண்ணீர் கற்றுத்தந்த பாடம்."

"அப்படியானால்......?"

"ஆடவர் வர்க்கத்தின் மீது பழி தீர்த்துக் கொள்ளப் போகின்றேன்."

"அதற்கு நானும் பலியாவதா பூங்கொடி...?'

"ஆடவர் சமுதாயத்தின் உறுப்பினர்தானே தாங்களும்."

"ஒரு பூவிலுள்ள தேனை உறிஞ்சிவிட்டு, தேன் இல்லை என்று தெரிந்ததும் மற்றொரு பூவை நாடும் வண்டைப் போன்றவனா நான்? பூங்கொடி! பூவைப் போன்றவளாக நீ யிருந்தாலல்லவா நான் வண்டைப் போன்றவனாக மாறவேண்டும். நீ வற்றாத ஊற்று. பூவிலும் சிறந்தவள். தேனற்ற பூஞ்சோலையா நீ? உன் உள்ள மலர்ச் சோலையிலே அன்பு நீராட வந்திருக்கிறேன். ஏற்க மாட்டாயா?"

"இவ்வளவு கனி மொழிகளும் என் கற்பைச் சூறையாடுவதற்காகத் தாங்கள் தரும் முன பணம்."

"என் மொழிகளைச் சந்தேகிக்காதே பூங்கொடி"

"தங்கள் மொழிகளைச் சந்தேகிக்கவில்லை. சமூகம், சாத்திரம், சம்பிரதாயம், அதிகாரம், அந்தஸ்து இவைகளைப் பார்த்து நடுங்கும் தங்களைப் போன்றவர்களின் கோழை நெஞ்சத்தைத் தான் நான் சந்தேகிக்கின்றேன் சுவை சொட்டச் சொட்ட சிரித்துப் பேசுவேன் என்று கூற முன்வருகிறீர்களா? அப்படி முன் வந்தாலும் 'திருமணம்' என்ற சொல் காதில் விழும் பொழுது......"

'மண மாலையுடன் உன்னைத் தேடி ஓடோடியும் வருவேன் பூங்கொடி"

"உண்மையாகவா"

"இன்னுமா சந்தேகம்......"

"......ஆம். இப்பொழுது கூறிய மொழிகளில்தான் சந்தேகம்......"

"சந்தேகம்! நம்பிக்கையின்மை!!"

"பெண்டிர் சமுதாயம் ஆடவர் கூட்டத்தின் மீது வீச வேண்டிய ஈட்டியல்லவா அது!"

"பூங்கொடி! உன்னைப் போன்ற பெண்களை........."

"பார்த்திருக்க மாட்டீர்கள். பார்த்திருக்கமுடியாது. என்னைப் போன்ற பெண்கள் இந்த நாட்டிலே இருந்தால். குளிர்ந்த மொழி பேசி, குயில் மொழிப் பெண்களின் பருவத்தைச் சூறையாடி, சமுதாயம் சீறும் பொழுது அவர்களைக் கைவிட்டு, அங்ஙனம் கைவிடப் பட்ட இளம் பெண்கள், விபச்சாரப் படுகுழியில் தள்ளப்பட்டு நலிந்து விடுவோமோ என்று அஞ்சி, கருவைச் சிதைக்கும் பணியிலிறங்குவதைப் பார்க்க முடியாது! என்னைப் போன்ற பெண்களிருந்தால், காதலில்

தோற்றகத்திமுனைக்கு உயிரைப் பலியிடும் பாவையரைப் பார்க்க முடியாது. என்னைப் போன்ற பெண்களிருந்தால் "விபசாரம்" என்ற சொல்லே அழிந்து போயிருக்கும்."

"கணவனற்ற வாழ்வு ஒரு வாழ்வா? [illegible] பூ [illegible] ..........

"தரையில் படர முடியும். என்றாலும் நான் அப்படி வாழ விரும்பவில்லை."

"பூங்கொடி! பெற்றோரைப் பகைக்க வேண்டுமே என்பதைப் பாராது பகட்டான வாழ்வுக்கெல்லாம் ஓர் முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, அந்தஸ்துக்கும், அதிகாரத்துக்கும் பிரிவுபசாரம் கொடுத்துவிட்டு உன்னை நான் இன்றே திருமணம் செய்து கொண்டால்........."

"என் வாழ்க்கை நாடகத்தின் கதாநாயகரே தாங்கள்தான் பிரபு."

"கற்பூரப் பெட்டகமே, இப்பொழுதேனும் நம்புகிறாயா" என்று சொல்லிக் கொண்டே பூங்கொடியைத் தழுவ முயன்றான் சிதம்பரம்.

"மன்னித்து விடுங்கள். என்னைத் தாங்கள் விரும்புவது உண்மையானால் தயவு செய்து என்னைத் திருமணமாகும் வரை தொடாதீர்கள்."

"ஏன்? என்ன?"

"ஆண்களின் ஸ்பரிசம், பெண்களுக்கு மயக்க மருந்து."

"பெண்களின் கண்களல்லவா ஆடவர்க்குப் போதை தரும் மது."

"அது இன்பத்தைத்தானே தரும். துன்பத்தைத் தராதே."

"அப்படியானால்..........."

"ஆண்களின் ஸ்பரிசம் பெண்களுக்கு மயக்க மருந்துதான். பெண்களைத் தொட்டுப் பேசி, அவர்களின் பலவீனமான நெஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை வேதனைச் சாலையில் நடமாட விட்டுவிடுவார்கள் ஆடவர்கள்."

"தொட்டால் கூட கற்பு கெட்டுவிடும் என்று கூற [illegible]

[illegible] விஷயத்தில் அப்படித்தான் எண்ண வேண்டியிருக்கிறது. தொட்டுப் பேசுதல்தான் அன்புக்கு அடையாளமா? இப்போது என் உள்ளந்தான் தங்களுக்குச் சொந்தம். திருமணமான பிறகு என் உள்ளமும் உடலும் தங்களுக்குச் சொந்தமாகும்."

"பூங்கொடி!"

"இப்படியெல்லாம் பேசுகிறேன் என்று கோபிக்காதீர்கள். என் வேதனையின் விளைவு. காதலுக்குக் கட்டுப்பட்டுப் பின்னர் அந்தக் காதகனால் கைவிடப்பட்டு, கஷ்டத்தின் நிழலிலே படுத்து, கண்ணீரின் போக்கிலே வாழ்ந்து, ஆடவர் சமுதாயத்தின் காலடியில் சிக்குண்டு, சிதைந்து, இன்பத்தின் வாசனையே என்னவென்று முகராத ஒரு சோகச் சித்திரந்தான் நான். கட்டிய கணவன், தாலிக்கயிற்றிலுள்ள மஞ்சள் காயுமுன் சட்டத்தைத் துணைக்கழைத்துக் குற்றங்கூறிக் கைவிட்டான். கண்ணீர்ப் படலங்கள் நிறைந்த சோகக் காவியமாகத் தானிருக்கிறது என் வாழ்வு. ஏழை இளம் பெண்களின் கண்ணீரின் ஈரத்திலே, தங்களது காமச் செடியை வளர்க்கும் நச்சு மனப்பான்மையினரைப் போல் தாங்களும் ஆகிவிடக் கூடாது என்பதுதான் என் வேண்டுகோள்; பிரபு." பூங்கொடி அழுதாள்.

"கலங்காதே பூங்கொடி."

"கண்ணீர் என் போன்ற பெண்களது கண்களின் வாடிக்கைச் சரக்கு. இந்த நாட்டிலே காதல் என்பது எங்கே நடைமுறையில் செய்து காட்டப்படுகின்றது? காதல் என்னும் சொல், தமிழ்நாட்டு இலக்கியச் சந்தையிலே எழுத்தாளர்களுக்கு [illegible] பொருளாக மட்டுந்தானே இருக்கிறது? உம்."

பூங்கொடி பெருமூச்சு விடுகிறாள்.

"பூங்கொடி, பெருமூச்சு இன்னுமா?"

"அது ஆனந்த வாழ்விற்கு ஓர் அஸ்திவாரக்கல்."

சிரிக்கமாட்டாயா?

"....................."

"சிரித்தால்தான் நீ போக முடியும்?"

பூங்கொடி சிரித்துவிடுகிறாள்.

"பூங்கொடி"

"சிதம்பரம்,"

"பூங்கொடி. நீ உண்மையிலேயே ஒரு புதுமைப் பெண் தான். நீ என்னிடம் பேசிய பேச்சுக்கள் மட்டும் நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குத் தெரிய நேர்ந்தால் "புதுமைப் பெண்" என்ற தலைப்பின்கீழ் உன்னைப்பற்றித் தெள்ளுதமிழில் ஒரு காவியம் பாடி தமிழகத்துக்கு அர்பணித்திருப்பார்."

"புதுமையைப்பற்றிப் பாட இந்த நாட்டில் அவர் ஒருவருக்குத்தானே தைரியம் இருக்கிறது." என்று சொல்லிக் கொண்டே பூங்கொடி சிதம்பரத்தைப் பார்த்தாள். இருவரும் நடந்தனர்.

அப்பொழுது "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்ற பாட்டை வானொலி பாடவில்லை—அதன் அருகே சென்று கொண்டிருந்த ஒரு கல்லூரி மாணவன் இனிமையோடு பாடிக்கொண்டே சென்றான்.

# போர்வாள்

சென்னை 1—9—51 சனிக்கிழமை


# ஐந்தாம் ஆண்டு

★

நமது 'போர்வாள்' பூரிப்போடு கூறிக்கொள்ளுகிறது, தனது நான்காண்டுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஐந்தாம் ஆண்டில் நுழைந்து இருக்கும் நற்செய்தியை.

திராவிடர் கழக வார இதழாகப் பிறந்து, பெரியாரின் பொருந்தாத் திருமணத்தால் கண்ணீர் சிந்தி விலகி அறிஞர் அண்ணாவும் மற்றக் கூட்டுத் தோழர்களும் கண்ட திராவிட முன்னேற்றக் கழக இதழாக மாற்றம் பெற்றும் போர்வாள் உலாவி வருவதைத் தோழர்கள் அறிவர்.

திராவிடநாடு பெறுவதே மூலக் கோட்பாடு, வடவர் ஆதிக்கத்தை வீழ்த்துவதே அதன் நடைமுறைத் திட்டம் என்பதை, சென்ற நான்கு ஆண்டுகளில் நன்கு நிறைவேற்றி வந்து இருக்கிறது. ஐந்தாம் ஆண்டிலும், ஏன், திராவிடநாடு உருவாகும் வரையிலும் முன்னிலும் கூடுதலாகத் தொண்டாற்றும் என்பதை மகிழ்ச்சியோடு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

சனாதனத்தைச் சாடுவதிலும், சமதர்மக் கருத்துக்களை விதைப்பதிலும், பகுத்தறிவைப் பரப்புவதிலும், தயை தாட்சண்யம் துளியும் காட்டாமல், பணிபுரிந்து வந்திருப்பதில் 'போர்வாள்' பெருமிதம் கொள்ளுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கொடி பறக்காத பகுதி இல்லை, கீதம் கேட்காத நாள் இல்லை, கழகம் தோற்றுவிக்கப்படாத இடம் இல்லை, என்ற நல்ல நிலை, கழகம் தோன்றி இரண்டு ஆண்டு முடிவதற்குள் ஏற்பட்டு இருப்பதற்கு, 'போர்வாளும்' தனக்குரிய பங்கைச் செய்து முடித்திருக்கிறது என்பதை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் உள்ளம் பெரு மகிழ்வு கொள்ளுகிறது.

'போர்வாள்' தனது பெரும் பொறுப்பை, சிறந்தமுறையில், இடையறாது ஆற்றிவருவதற்குப் பெரிதும் துணையாக இருப்பவர்கள் ஆங்காங்குள்ள ஆதரவாளர்களும், குறிப்பாக ஏஜண்டுத் தோழர்களுமே யாவர். அவர்கள் ஒத்துழைப்பு மேலும் இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதோடு, இப்புது ஆண்டில் அவ்வொத்துழைப்பு இரட்டிப்பாக இருக்க வேண்டும் என்றும் விழைகிறோம்.

நமது விருப்பம் நிறைவேற அவர்கள் ஆவன செய்வார்கள் என்ற உறுதி நமக்கு உண்டு.

இந்த நான்கு ஆண்டில், பிரதி பலன் கருதாமல் பற்பல விதமான சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளும், கதைகளும் நமக்கு அளித்து, 'போர்வாள்' முயற்சி வெற்றிபெறவும், வளர்ச்சியுறவும் பெருந்துணை புரிந்த பேனா வீரர்களுக்கு 'போர்வாள்' பெரிதும் கடமைப் பட்டு இருக்கிறது.

குறித்த காலத்தில் 'போர்வாள்' திராவிட மக்களின் கரங்களில் ஒவ்வொரு வாரமும் திகழ, சிரமம் பாராமல் தங்கள் பணியினைச் செவ்வனே ஒழுங்காக முடித்துத் தந்த அச்சுக்கோப்பவர்களுக்கும், அச்சுப்பொறி இயக்கிகளுக்கும், கணக்காயர்களுக்கும் 'போர்வாள்' தனது மகிழ்ச்சியைக் கூறிக்கொள்கிறது. கூடார்த்தப் படங்கள் வாராவாரம் வரைந்து கொடுத்து, வாசகர்களின் நல்லாசியைப் பெற்றுள்ள ஓவியர் A. K. சாமி அவர்களுக்கும் 'போர்வாள்' கடமைப் பட்டு இருக்கிறது.

திராவிடத் தோழர்கள் அனைவருக்கும் தனது புத்தாண்டுச் செய்தியைக் கூறிக் கொண்டு, நான்காம் ஆண்டிற்குச் செலவளித்தும் ஐந்தாம் ஆண்டிற்கு வரவேற்புக் கூறியும், புத்தாண்டுப்பயணத்தைத் தொடங்குகிறது 'போர்வாள்.'


"போர்வாள்"

தி. மு. க.

## 2-ம் ஆண்டு மலர்

செப்டம்பர் 17 அன்று வெளிவருகிறது!

இந்த மலரில்!

* திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்ற இரண்டாண்டுப் பணிபற்றிய விவரம்.
* கழக இலட்சியங்களை விளக்கிக் காட்டும் சிறந்த கற்பனை ஓவியங்கள்.
* ஆட்சியாளர்களின் கோணல் போக்குகளை இடித்துக் காட்டும் கேலிச்சித்திரங்கள் கார்ட்டூன்கள்)
* திராவிட இயக்கத்தின் நிர்மாணகர்த்தாக்களில் ஒருவராகிய அறப்போர்த் தலைவர் டாக்டர் நாயரின் வாழ்க்கை வரலாறு.
* சமதர்மத் தந்தை காரல் மார்க்சின் வாழ்க்கை விளக்கம்.
* காங்கிரஸ் தேர்தல் அறிக்கை—ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை.
* அறிஞர் அண்ணாவின் வாழ்க்கையில் சில சம்பவங்கள்.
* திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள்—பேச்சாளர்களின் படங்கள்.

விலை அணா 8.

* விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான படிகளின் எண்ணிக்கையை உடனே தெரிவிக்க.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

...தக் காட்டுகிறது" என்று ...ளக்கம் தருவதாக எண்ணிக் கொண்டு சாமர்த்தியம் பண்ணுகிறார்.

இதற்குத் 'தினசரி' 25-8-51-ல் ...றியிருக்கும் பதில்:—

"உணவு நிர்வாகம் அவ்வளவு மோசமாக இருந்தால் பட்டினிக் கலகங்கள் வந்து இருக்குமாம். அப்படி எதுவுமே நடக்காததிலிருந்தே நிலைமை ஒன்றும் மோசமாகி விடவில்லை என்பது தெரியவில்லையா என்று ஸ்ரீ. கோபால் ரெட்டி கேட்கிறார். பட்டினிக் கலவரங்கள் எவையும் இல்லைதான்.

மக்களுக்குப் பட்டினிக் கஷ்டமே இல்லை என்பதற்கு இதுதான் ருஜு என்று மதிகெட்ட இந்த மந்திரி கூறுகிறார் என்றால் அவரை ஒன்று கேட்கிறோம். பட்டினிக் கலகங்கள் நடந்தால் தான் உணவு கஷ்டமிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்வது என்பதே இந்த மந்திரி சபையின் தீர்மானமா? பட்டினி கஷ்டத்தை இந்த மந்திரிகள் அறியும்படிச் செய்ய மக்கள் கலவரத்தில் ஈடுபடவேண்டும் என்றுதான் இவர்கள் விரும்புகிறார்களா?

பொது ஜனங்கள் கலவரம் செய்யாமல் இருக்கிறார்கள் என்றால், பட்டினிக் கஷ்டம் அவர்களுக்கு இல்லை என்பதால் அல்ல. மக்களுக்கு இருக்கும் பொறுமையே அதற்கு முக்கியமான காரணம்.'

விளக்கம் தேவைப் படாத வாசகம் 'தினசரி' கூறியிருப்பது.

* * *

மக்களுக்குக் கஷ்டம் அதிகரித்தால், குழப்பம் ஏற்படும், கலகம் மூட்டுவார்கள் என்பது நிதி அமைச்சரின் வாதம், ஒப்புவோம்.

'தினசரி' கூறும் 'பொறுமை'யைத்தான், நாம் 'மாயா வாத போதை' என்று சொல்லுகிறோம், அழுத்தம் திருத்தமாக.

மக்களின் கஷ்டங்களை மந்திரிகள் உணர வேண்டுமானால், மக்கள் கலவரம் செய்யவேண்டும் என்று சித்தாந்தப் படுத்திப் பேசுகிறார் சென்னை நிதி அமைச்சர் கோபாலர்.

கல்கத்தாவில், முன்னேற்றக் கட்சியினர்,—குழப்பம் செய்யவில்லை—, மூவாயிரவர் சேர்ந்து கொண்டு, ஊர்வலமாகச் சென்று, மந்திரிகளைக் காண, சர்க்கார் காரியாலயத்துக்குச் சென்றனர். பரிசு கைமேல் கிடைத்து விட்டது. அதுதான் போலீஸ் தடியடி! கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு! சிலருக்கு காயம்—சிலர் கைது!

தங்களுடைய கஷ்டங்களைக் கூற அமைதியாக வந்த முன்னேற்றக் கட்சியினர்மீது போலீஸ் படையை ஏவி நாசத்தைத் தூவிய, வங்க உணவு மந்திரிகூறி இருப்பார், 'முன்னேற்றக் கட்சியினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டது உண்மையான குறைகளுக்குப் பரிகாரம் தேடிக் கொள்ள அல்ல—அரசியல் நோக்கம் கொண்டே ஆர்பாட்டம் செய்தனர் முன்னேற்றக் கட்சியினர்' என்று!

முன்னே போனால் கடிக்கிறது—பின்னே வந்தால் உதைக்கிறது! இந்தப் போக்கில்தான் இருக்கிறது காங்கிரஸ் ஆளவந்தார்கள் போக்கு இங்கும்—எங்கும்!

'கலவரம் செய்தாயுதான் கஷ்டங்களை உணருவோம்—அமைதியாக ஊர்வலம் செல்லுவதையும் சட்டத்தைக் காட்டித் தடை செய்வோம்—குறைகளை எடுத்துக் காட்டக் கூட்டம் கூட்டுவதற்கும் தடை விதிப்போம்—அனுமதி பெற்று கூடிக் கூறினாலும் மாற்றுக் கட்சியினரின் பொய்ப் பிரசாரம் என்று பழி சுமத்திப் பேசுவோம்—அனுமதி பெறாமல் கூடினால் தடியடி தருவோம்—துப்பாக்கியால் சுடுவோம்—சிறையில் அடைத்துப் பூட்டுவோம்—எச்சரிக்கை—எச்சரிக்கை"! சபாஷ் நிதி அமைச்சரே! உங்கள் சித்தாந்தமும்—செப்பிடு வித்தையும்!!

## தி. மு. கழக மாநில மாநாடு வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம். திராவிட முன்னேற்றக்கழக மாநில மாநாடு சென்னையில் நடைபெற ஏற்பாடாகி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

மாநாடு பெரிய அளவிலும் பயன் தரும் முறையிலும் நடைபெற்று, திராவிடச் சமுதாயத்தில் ஓர் புதிய எழுச்சியை ஊட்டவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

இதற்குத் தங்களின் ஒத்துழைப்பைத் தரக்கோருகிறேன்.

மாநில மாநாட்டுக்காக, மாவட்டங்கள், இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை வசூலித்துத் தருவது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதற்கான நன்கொடைச் சீட்டுகள் ஒவ்வொரு மாவட்டச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இயக்கத் தோழர்கள் அனைவரும் அவர்களுடன் ஒத்துழைத்து, மாவட்ட நன்கொடைத் தொகையைத் திரட்டித் தரக் கோருகிறேன்.

துவக்க வேலைகளைக் கவனிக்கவே, பணம் அதிகம் தேவைப் படுகிறது என்பதைத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாதுரை
தி. மு. கழக பொதுச் செயலாளர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பசியால்துடித்துச் செத்து விழுந்தவனின் பிரேதம்! பசிக் கொடுமை தாங்காது பிள்ளையை விற்றவனின் பரிதாப நிலை! இப்படிப்பட்ட செய்திகள் இன்று தினம் தினம் பத்திரிகைகளிலே வருகின்றன.

ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துபவரும் 'இவைகள் எங்கோ நடக்கிறது. 'நமக்கென்ன' என்று வாளாவிருக்கின்றனர். மக்கள் சக்தி திரண்டெழுந்து "ஏன் இந்த அக்ரமங்களை நடக்கவிடுகிறீர்கள்?" என்று கேட்டால் "பசியால் யாரும் சாகவில்லை. இறந்தவர்கள் பிச்சைக்காரர்கள்" என பதில் கூறிவிடுகின்றனர், பிச்சைக்காரர்களும் இந்நாட்டு மக்கள்தான் என்பதையே மறந்து. ஏதாவது நொண்டிக் காரணம் கூறித் தட்டிக்கழித்து விடுகிறார்களே தவிர பஞ்சம் போக்க, உணவு உற்பத்தியைப் பெருக்க இவர்கள் பயன்தரும் வழி செய்வதாய்க் காணோம்.

உணவு உற்பத்தியைப் பெருக்க ஓட்டுத்திட்டங்களை வைத்திருக்கிறார்களே தவிர வேறில்லை. "ஒரு வேளை உணவைத் தியாகம் செய்திடுவீர். அரிசியை மட்டுமே உணவாகக் கொள்ளாதீர். காய்கறிகளைத் தின்னுவீர், மரங்களை நடுவீர்" என உபதேச உத்திரவுகளை வீசுகிறார்கள். இந்த உபதேச உத்திரவுகள் கறிக்குதவா ஏட்டுச்சுரை என்பதை இவர்கள் ஏனோ எண்ணிப் பார்ப்பதில்லை! உணவுப் பஞ்சத்தைப் போக்க மார்க்கம் தெரியாத இவர்கள் இப்படிக் கூறித் தப்பிவிடுகிறார்கள். அல்லது தெரிந்தும் நடைமுறையில் செய்து காட்ட சக்தி இல்லாது இவ்விதம் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றுதான் நாம் எண்ணவேண்டியிருக்கிறது

உணவு உற்பத்திக்குத்தான் தகுந்த திட்டங்கள் இல்லை என்றாலும் விளையும் தானியங்களையாவது சரிவர கொள்முதல் செய்து மக்களுக்கு [illegible] போகம் [illegible] என்றால் அதுவும் இல்லை.

கடந்த ஆண்டு புள்ளி விபரப்படி சென்னை மாநிலத்தில் 40 லட்சம் டன் நெல்லும், 20 லட்சம் டன் புஞ்சையும் விளைந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைப்பது 10 லட்சம் டன் உணவு தான்யம். ஆக 70 லட்சம் டன் உணவு தான்யத்தை மட்டும் வைத்துக் கொண்டே இம்மாநில மக்களுக்கு நபர் ஒன்றுக்கு 15 அவுன்ஸ் ரேஷன் தரலாம். ஆனால் ஆள் ஒன்றுக்கு எட்டவுன்ஸிலிருந்து ஆறவுன்ஸாகக் குறைகிறது. "ஆறவுன்ஸ் மந்திரிகள்" என்ற கீர்த்தியையும் கித்தாப்பையும் நிலைநாட்டிக் கொள்ள நம் அமைச்சர்கள் தீட்டிய திட்டங்கள் போலும் இவை!

இதிலிருந்து நாம் அறியக் கிடக்கும் உண்மை விளைந்த தான்யங்கள் சரிவர கொள்முதல் செய்யப்படவில்லை. ஆறவுன்ஸ் கொடுக்கும் அளவிற்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. நிலமுதலைகள் தானியங்களைப் பதுக்கிக் கள்ளச் சந்தைக்கு அனுப்பிவிட்டன. நிலபிரபுக்கள் சர்க்கார் அதிகாரிகளை ஏமாற்றி நாமம் போட்டுவிட்டனர். அல்லது அவர்களை 'சரிகட்டி' விட்டனர்.

இக்கொள்முதல் குறைவின் காரணமாய் ரேசனும் குறைகிறது. உணவுப் பொருள்களின் விலையும் உயர்ந்து விட்டது. மக்களும் அதிக விலையில் வாங்க முடியாது தவித்து மடிகின்றன[illegible] மனிதன் சருகாகிறான் திரு[illegible] கோவிலூர் நடக்கிறது.

ஆளும் வர்க்கத்தின் கையலாகாத்தனம், நில முதலா[illegible]களுக்குப் பயந்த தன்மை, உ[illegible] தேச உத்திரவு இருபட்டினி[illegible] சாவுகளை [illegible] வும் [illegible] வும் [illegible] பட்டு வருகிறது.

நமக்குப் பின்னால் உண்மையான விடுதலையடைந்த, நம்மை விட சீர்கேடான நிலையிலிருந்த சீனா இன்று உணவு விஷயத்தில் சுயதேவையை பூர்த்தி செய்து கொண்டு நமக்கும கடன் தரும் நிலையிலிருக்கிறது. இதைக் கண்டு நமது 'பஞ்ச மந்திரி' முன்ஷி வெட்கமோ துக்கமோ படுவதில்லை. பாணிவாலா மஹாராஜாவின் பாதத்தைத் தாங்கிக்கொண்டும், மரங்களை நட்டுக் கொண்டும், சோமநாதபுர ஆலயத்தைச் செப்பனிட்டுக் கொண்டும் தான் இருக்கிறாரே ஒழிய சீனாவின் சுபிட்ச நிலைக்குக் காரணம் என்ன? எப்படி ஏற்பட்டது அங்கு இந்தச் சுந்தர வாழ்வு என்று சிந்திப்பதில்லை.

பிரம்மாண்டமான நிலச் சீர்திருத்தச் சட்டம் சீனாவின் மக்கள் குடியரசால் கொண்டுவரப்பட்டு நடைமுறையிலே நடத்திக் காட்டப்பட்டது. நில முதலாளிகளிடமிருந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உழுது பாடுபடும் பாட்டாளிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. நிலப் பிரபுத்துவத்தை ஒழித்து உழுபவனுக்கே நிலத்தையளிப்பது என்ற மத்திய புள்ளியிலிருந்து கொண்டு, பல கோணங்களிலே சட்டங்களைத் தீட்டி, காடுதிருத்திக் கழனியாக்கி, வளம் கொழிக்கும் நாடாக, சிங்காரச் சோலையாக ஆக்கிவிட்டனர் சீனத்தை அங்குள்ள ஆளும் வர்க்கத்தினர்.

ஆனால் இங்குள்ளோர் "சுதந்திரம் வந்தது, சுதந்திரம் வந்தது" எனக்களிப்புச் சிந்து பாடி மக்களை ஏமாற்றுகின்றார்களே தவிர உண்மையிலேயே உணவு உற்பத்திக்கான வழி செய்வதில்லை.

சுதந்திரம் சுபிட்சத்தின் நுழைவுவாயில். ஆனால் நம் சுயநலவாதிகளின் கையிலே சிக்கிவிட்டால் மக்களுக்குச் சுக வாழ்வு கிடைப்பதில்லை. சுதந்திர நிலை வருவதில்லை. மாறாக மனிதன் கழுகாகும் சந்தர்ப்பம்தான் பிறக்கிறது.

நம்நாட்டு சுகபோகிகள் வனவிழா நடத்தியே திருக்கோவிலூர்களை நடக்க விடுகின்றனர். வளரும் திருக்கோவிலூர்கள் ஆபத்தை சிருஷ்டிக்கும் அறிகுறிகள் என்பதை ஆளுவோர் மறந்துவிடக் கூடாது. மக்கள் நலனிலே நாட்டம் கொண்டு அவசரமாக உணவுப் பிரச்னையைத் தீர்க்க வழி வகைகள் செய்தாக வேண்டும்.

* நில முதலாளிகளிடமிருந்து கட்டாயக் கொள் முதல் செய்ய வேண்டும்.

* சுய தேவைப் பூர்த்தி ஏற்படும் வரையில் வேண்டிய அளவு உணவு தானியங்களை எவ்வித அரசியல் நிபந்தனையுமின்றி வெளிநாடுகளிடமிருந்து வாங்க வேண்டும்.

* நிலமுதலாளிகளிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்து உழுது தொழில் நடத்துவோருக்கு வழங்கி நிலபிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டும்.

* கூட்டுப்பண்ணை முறையிலே உழவுத் தொழிலை வளர்க்க வேண்டும்.

இவைகளைச் செய்து முடித்தால் மட்டுமே பஞ்சத்தைப் போக்க முடியுமே தவிர உபதேச உத்திரவுகளாலும், "சால் ஜாப்பு"களாலும் திருக்கோவிலூர்கள்தான் மென்மேலும் பெருகும்.

இந்நாட்டு மக்கள் தான் என்ன நெருக்கடி ஏற்பட்டாலும் மௌனம் சாதித்து உள்ளதைக் கொண்டு திருப்திபடைபவர்களாயிற்றே என்று ஆளவோர் எண்ணமிட்டால் கண்டிப்பாய் அவர்கள் ஏமாந்து விடுவார்கள்.

இன்று மக்களின் உள்ளங்களிலே கொந்தளிப்பு இருக்கத்தான் செய்கிறது. திருக்கோவிலூர்களைக் காணக்காண அவர்கள் இதயம் எரிமலையாகிவிடும். இந்த உண்மைகளை ஆளவந்தவர்கள் உடனடியாக அறிந்து கொள்வது நல்லது.

---

**தம்பி முட்டைப் பூச்சி:** அண்ணே! இப்பொழுதெல்லாம் மனிதர்கள் இரத்தம் ருசியாக இல்லையே!

**அண்ணன் முட்டைப் பூச்சி:** ருசியா தேடுகிறாய்! மனிதர் உடம்பில் இப்போது இரத்தமே கிடைப்பதில்லையே. கொஞ்ச நஞ்சம் கிடைத்தாலும் பருத்திக்கொட்டை புளியங்கொட்டை, மண், கல் எல்லாம் தின்னும் மனிதர்கள் இரத்தம் எப்படி ருசியாக இருக்கும் தம்பி!

---


# திராவிட முன்னேற்றக் கழக
# மாநில மாநாடு

**சென்னையில்**

**விரைவில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது**

* மாநில மாநாடு மகத்தான சம்பவம்
* கழக வரலாற்றிலே புதிய பொன்னேடு!
* நாட்டை மீட்கும் திட்டம் தீட்டத் தக்கதோர் முயற்சி!

**வாரீர் வீரர்காள்! திரண்டு வாரீர் திருஇடம் காண!**

**பாதை வகுத்திட வாரீர்!**

**பாசறை அமைத்திட வாரீர்!**

**மாநில மாநாடு, கொள்கைப் பற்று எனும் செல்வம் குறைவறக் கொண்டவர்களின் கூட்டு முன்னணி!**

**நாம் அரசியல் பட்டுப் பூச்சிகள் அல்ல!**

**பதவி நாடும் வெட்டுக்கிளிகளும் அல்ல!**

**கொள்கைக்காக உழைக்கும் வீரர்கள்.**

**அவ்வீரர் கோட்டம் அமைக்க விரைந்து வாரீர்!**

**வாரீர் மாநில மாநாட்டுக்கு! வழங்குவீர் உழைப்பை!!**

விளம்பரக் குழு,

தி. மு. கழக மாநில மாநாடு

# குழப்பம் கோரும் கோபாலர்

## சித்தாந்தமும்—செப்பிடு வித்தையும்!

"காஞ்சி"

"எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டும் பொது மக்கள் முணுமுணுக்காமல் பொறுமையாகவே இருந்தார்கள். இதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். உண்மையில் நிலைமை மோசமாக இருந்தால் மக்கள் குழப்பம் உண்டாக்கி இருப்பார்கள். அவ்வாறே பட்டினி கலவரம் நடக்காததே நிலைமை மோசமாக இல்லை என்பதைக் காட்டுகிறது."

"துணிவிலை கூடுதலாக இருக்கிறது—மட்டுப்படுத்துங்கள்!"

"உணவு தான்யங்கள் விலை அதிகமாக இருக்கிறது—குறையுங்கள்!"

"உணவு பங்கீடு குறைக்கப்பட்டு இருக்கிறது—கூட்டுங்கள்!"

"பொருள்களின் விலையைக் குறையுங்கள்! உணவு பங்கீட்டைக் கூட்டுங்கள்!"

* * *

8 நபர்கள் காயப்பட்டனர். அவர்களில் இரண்டு பெண்களும் உண்டு!

11 போலீஸ் சிப்பந்திகளுக்கு அடி விழுந்தது!

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு காயம் ஏற்பட்டது!

8 குதிரைகளுக்குக்கூட காயம் ஏற்பட்டுவிட்டது!

19 நபர்கள் கைது செய்யப்பட்டனர்!

* * *

சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் கோபாலர், உறுப்பினர்களின் பேச்சுக்கு பதில் அளித்தபோது, 'எப்பொழுது பார்த்தாலும் ஓயாமல் உணவைப் பற்றித்தான் பேசிக்கொண்டு இருப்பதா' என்று உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார்—இல்லை — கோபித்துக் கொண்டார்.

எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டு இருந்தும்கூட பொது மக்கள் முணு முணுக்கவில்லை—பொறுமையாக இருக்கிறார்கள் என்று கூறியதோடு அவர்களைப் பாராட்டவும் பாராட்டி இருக்கிறார் நிதி அமைச்சர். கஷ்டங்களுக்குமேல் கஷ்டங்கள் எவ்வளவு வந்தாலும், பொது மக்கள் எப்படி சகித்துக் கொண்டு இருக்கிறார்கள் இத்துணைக் கண்டத்தில் மட்டும் என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும்.

வங்கப் பஞ்சத்தில் 40 லட்சம் மக்கள் செத்து மடிந்தார்கள். வீதிகளில் எல்லாம் பிணம். பிணத்துக்குமேல் பிணம். பார்க்கின்ற இடமெல்லாம் பிணம். பரிதாபக் காட்சி! அன்று வங்க மக்கள் லட்சக்கணக்கில், புழுப்போல் சுருண்டு செத்து மடிந்தனர்.

பிணங்களை, உடனுக்குடன் அப்புறப்படுத்தக்கூட போதிய ஆட்கள் இல்லாமல், பிண நாற்றம் வீசிக்கொண்டு இருந்தது கல்கத்தா வீதிகளில் கோரம்—கொடுமை!

புரட்சித் தீ மூளவில்லை. வெள்ளை ஏகாதிபத்தியம் ஆடவில்லை — அசையவில்லை. இப்பஞ்சத்திற்குப் பொறுப்புள்ள வெள்ளை அதிகாரிகள்ன் தலைகள், அவர்களின் உடல்களில் எப்பொழுதும் போல் ஒட்டிக் கொண்டுதான் இருந்தன!

மக்களுக்கு ஏற்ற மந்திரிகள்—மந்திரிகளுக்கு ஏற்ற மந்திரிகள்!

மக்கள் கருத்துக் குருடர்களாக இருக்கிறார்கள். இங்கு, மற்ற நாடுகளில், காலாகாலத்தில் ஏற்பட்ட கருத்துப் போராட்டங்கள் இங்கு நிகழவில்லை என்பதை நாம் மறக்கக் கூடாது.

உணவு விஷயத்தில், ஆளவந்தார்களின் நிர்வாக ஊழலைக் கண்டு, கோபிக்காமலும், கிளர்ச்சியில் ஈடுபடாமலும் இருக்கும் மக்களைப் பார்த்து, 'உண்மையில் நிலைமை மோசமாக இருந்தால் மக்கள் குழப்பம் உண்டாக்கி இருப்பார்கள். அவ்வாறு பட்டினி கலவரம் நடக்காததே நிலைமை மோசமாக இல்லை என்ப

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ர பிரதேச காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் கூட்டு ஒப்பந்தத்தின் ஒரு சிறு பகுதிதான், சர்க்கரை ஆலை அரசுகளிடம் உபரியாக உள்ள சர்க்கரையின் ஒரு பகுதியை கட்டுப்பாட்டை மீறி கூடுதலான விலைக்கு விற்றுக் கொள்ள அனுமதித்திருப்பது இதைத் தொடர்ந்து பல இனி நடைபெறும்.

கோமிண்டாங் கட்சியால் சீன மக்கள் பெற்றது என்ன என்பது விவரித்துக்கூறத் தேவை இல்லை. அதே கோமிண்டாங் போன்று எல்லா வகையிலும் மாறியுள்ள காங்கிரசால், இந்நாட்டு மக்கள் பெற இருப்பது, சீனமக்கள் பெற்றதிலும் வேறாக எப்படி இருக்க முடியும்?

பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்து மக்களும், குறிப்பாக திராவிட மக்களும், நல்வாழ்வு பெற்று வாழவேண்டுமானாலும், தங்களுடைய எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பு உத்தரபிரதேசத்தின் பிடியிலே இருக்கக்கூடாது. உத்தர பிரதேசத்தின் ஆதிக்கம் எவ்வளவு விரைவில் அழிக்கப்படுகிறதோ, அதைப் பொருத்துத்தான் இருக்கிறது மக்களின் எதிர்கால வாழ்வும். சீனா நமக்கு ஓர் வழிகாட்டி. சியாங்—கே—ஷேக். ஆதிக்கம் பார்மோசா தீவோடு ஒடுக்கப்பட்டுவிட்டது போல், உத்தர பிரதேசத்தின் ஆதிக்கமும் உத்தர பிரதேச அளவோடாவது ஒடுக்கப்படவேண்டும், அறவே ஒழிக்க முடியவில்லையானால். நம்முடைய நாட்டை, நல்லமுறையில் இருக்க நாம் கவனித்துக்கொள்ளவேண்டுமானால், உத்தர பிரதேசத்தின் பிடியிலிருந்து நாம் நம்மை முதற்கண் விடுவித்துக்கொள்ளவேண்டும். இதுவே திராவிடநாடு கோரிக்கை. இதுவே நமது மூச்சு.

---

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

லாற்றை—எல்லாம் விளக்கமாக உரைக்கிறான் கேளுங்கள்!

* * * *

“பரிவின்பா! நான் முல்லை நாட்டைச் சேர்ந்தவன். முல்லை நாட்டு மன்னர் முத்துவீரரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய்! அவர் இப்பொழுது இறந்துவிட்டார். அவருடைய ஆத்ம நண்பன் நான்! அரண்மனையிலும் அவையிலும் அதிகமாக செல்வாக்கு எனக்கு இருந்தது!

மன்னர் மந்தகாச மான மாலைப் பொழுதுகளைக் கழிப்பது என்னுடன்! இரவு நேரங்களிலும் ஓய்வு நேரங்களிலும் அன்பாகப் பேசி மகிழ்வது என்னுடன்! பெரும் பிரச்னைகளுக்கெல்லாம் ஆலோசனை கேட்பது என்னிடம்! விருந்துகள், விளையாட்டுகள் ஆகியவை நடத்தி மகிழும் இடங்களில் மன்னரின் அருகில் நானிருந்தாகவேண்டும்! என்னைப் பார்க்கா விட்டால் அவருக்குப் பொழுது போகாது! தூக்கம் வராது. எனக்கும் கூடத்தான்!......

‘இன்பதாசா! நீ என் தாசனா இன்பத்தின் தாசனா?...’’

“மன்னவரே! இதுஎன்ன கேள்வி? நான் உம் தாசனாயில்லாவிடில் எனக்கு இன்பமேது? எனக்கு இன்பம் வருவது உம்மிடமிருந்து தானே! எனக்கு இன்பத்தின் ஊற்று நீர்! எனவேதான் நான் இன்பதாசன்!’’

“இன்பதாசா!...உன் ஓவியதாசன் நான்!...ஆஹா! அவை என் உள்ளத்தை வெகுவாகக்கவர்கின்றன இன்பா! இயற்கையின் பிரதிபலிப்புகள் உன் ஓவியங்கள்! எழிலின் உறைவிடங்கள் உன் ஓவியங்கள்! சிந்தனையில் சிதறிய சீரிய முத்துக்களைக் கோர்த்துத் தொகுத்த ஆபரணங்கள் அவை! கருத்தைக் கவரும் கருவூலங்கள் அவை! இன்பதாசன் ஒப்பற்ற ஓவியன் என்ற உண்மையை உலகிற்கெடுத்தோதும் முரசுகள் அவை!...’’

“அரசே!...அளவின்றிப் புகழ்கின்றீர்களே!...’’

“நான் அளவின்றிப் புகழ்கின்றேனா, அல்லது உம் புகழ் அளவின்றி நீளுகிறதா?......’’

“அரசே! நம் உரையாடல்தான் நீளுகிறது!.. இன்றிரவாவது தாங்கள் நன்கு கண்ணயர்ந்து களைப்பாரவேண்டும்!...’’

இத்தகைய பலப்பல உரையாடல்கள் எழும் எங்களுக்கிடையே!...காலம் மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது! (தொடரும்)

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிஸ்டு கட்சியின் நிர்வாகக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

29-7-51-ம் தேதி முடிந்தானேந்தலில் நடந்த பொதுக் கூட்டத்தில் K C சிவசாமி சொற்பொழிவாற்றிய பின் தோழர் ஆறுமுகம் கொலைக்கு பொறுப்பாளிகளை தண்டிக்கவேண்டுமெனவும் அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

(உ. அ.)
25—8—51

---

**தோழமைக் கழகம்.**
(10-வது வட்டம்)
ஆண்டு விழாவும், நூல் நிலைய
**நிதிக் கூட்டமும்**
**2-9-'51 காலை 9-மணிக்கு,**
சென்னை
**கோகலே மண்டபத்தில் நடைபெறும்.**

தலைவர்:
**சத்தியவாணிமுத்து**

பேச்சாளர்கள்:
க. அன்பழகன் M.A., சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், S. கௌதமி B.A, (Hons.)

இன்னிசை:
**இசைச்செல்வி ஜி. கஸ்தூரி**

**நுழைவுக் கட்டணம் 0-4-0**

நெடுமாறன்.
செயலாளர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"முடியாது! நான் என் நண்பனுக்கு நயவஞ்சகம் செய்யமாட்டேன்!..." என்றான்.

ஓவியரே!..."—சாகசமாகக்கூப்பிட்டான். சாட்டேந்தி! ஓவியன் அவன் முகத்தைப் பார்த்தான். தன் இடையிற்செருகியிருந்த பண மூட்டையொன்றை யெடுத்து ஓவியனுக்குக் காட்டினான் அக்குதிரை வீரன்.

"என்னைப் பணப்பித்தனென்றா எண்ணுகிறீர்?..இதைப்போல ஆயிரம் மடங்கு பணம் தந்தாலும், என்னை வதைப்படுத்தினாலும், என் காலில் விழுந்தாலும் நான் அந்தத் துரோகச் செயலை மட்டும் செய்யவே மாட்டேன்! ஆம், இது நிச்சயம்!!..."

"ஆ!... இவ்வளவு நெஞ்சழுத்தமா உனக்கு!..." குதிரையினின்று கீழே குதித்து மீண்டும் சாட்டையினால் ஓரே பேரொலி யெழுப்பினான். ஓவியன் புன்முறுவலோடு நின்று கொண்டிருந்தான்.

"அதோ பார்!..." என்று ஓவியனுக்கு அவன் பின்னாலிருந்த ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டினான் அக்குதிரை வீரன். ஓவியன் திரும்பிப் பார்த்தான், அங்கு ஒன்றுமில்லை. எனவே தலையைத் திருப்பி குதிரை வீரனைப் பார்த்தான்.

"ஓஹோ!...தோழனின் தன்மையைச் சோதித்துப் பார்க்கும் நாட்டமா?..."

"இல்லை நண்பரே! விளையாட்டு! ...அது மட்டுமல்ல! கடந்துபோகும் நாடகத்திற்கு ஒரு ஒத்திகையும் கூட!..." பரிவின்பன் பேசினான்.

"ஓஹோ! அப்படியா?......இப்பொழுது பாலை நாட்டிற்குப் பிரயாணமா?..."

"ஆம், அன்பரசு!..."

"பரிவின்பரே..."

"என்ன தோழரே?..."

"ம்...நேற்றிரவு நான் உம்மிடம் விடைபெற்றுக் கொண்ட பின்...."

"ஒரு பைங்கிளி உமக்குக்கிடைத்ததாக்கும்!..."

"ஆம் நண்பரே! ஒரு பைங்கிளி கிடைத்தது!..."

"ஓஹோ!...கிளியின் இறக்கைகள் அழகாக இருக்கின்றனவா?... மூக்கு மிகவும் கூர்மையாக இருக்கிறதா?...நன்றாகக் கொத்துகிறதா?... கூண்டிலே அடைத்து வைத்திருக்கிறீரா?..."

"ஆம், நண்பரே! அழகான அக்கிளியை என் உள்ளக்கூட்டில் அடைத்து வைத்திருக்கிறேன். அது என் உள்ளத்தில் கொத்திக் கொத்தி இன்பக் கிறல்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது!..."

"என்ன நண்பரே!...நேற்று என்னைக் குறை கூறினீர்! இன்று நீர் "உருவகப்படுத்தி"ப் பேச ஆரம்பித்துவிட்டிருக்கிறீரே!......ஏது?... நீரும் காதற்பாலையில் காலெடுத்து வைத்துவிட்டீரா?.........அப்படியானால் நீர் சொல்லும்;—கிளி, உண்மை கிளி, குயில், மயில், என் ஆகியவற்றிற்கு 'உம் மொழியில்' என்ன பெயர்?!..."

"சொல்லுகிறேன் நண்பரே!... கிளி!—அதற்கு "நம் மொழியில்" கரிகையெனகிள்ளை மொழிபேசும் பறவை' என்று பெயர்! குயில்!— 'கோதையென இசைபாடும் பட்சி!...மயில்......"

இருவரும் கொல்லெனச் சிரித்தனர்! சிரித்துக் கொண்டேயிருந்தனர்.

"நண்பரே! நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா?...என் ஊழியன் ஒருவன் காத்துக்கொண்டிருக்கிறான். அந்த மரத்தடியில்!...பரிவின்பன் பேசினான்.

"நல்லது நண்பரே! நலமுடன் திரும்பிவாரும்! வணக்கம்!..."

"வணக்கம்!..."

பரிவின்பன் குதிரைமீதேறிச் சென்று விட்டான். ஓவியன் அழகிகாகக் காத்துக் கொண்டிருந்தான். அவளும் சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தாள்.

"வந்துவிட்டாயா கண்ணே!..."

"வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா அத்தான்!..."—இப்படி அவள் கேட்பாளென்று எண்ணினான் அவன். ஆனால்,

"நான் அதிக சிரமத்தோடு என் வேலைகளை முடித்துக்கொண்டு இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டேன் அத்தான்!..." என்றாள் அவள்!

"அத்தான்! ஆரம்பியுங்கள்!..."

"ஓ...."

ஓவியன் அழகிய ஒரு மரத்தடியில் அமர்ந்தினான். அவன் அவளருகில் அந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டுவந்து வைத்துக்கொண் அந்த அழகுத் துணியில் வண்ண குழம்புகளைப் பூச ஆரம்பித்தா சிங்காரி சிலையென உட்கார்ந்திரு தாள். அவன் ஓவியக்கோல் வி னின் போர்வாளென சுழல ஆர பித்தது'...

* * * *

மேகத்தை முட்ட வளர்ந்திரு கும் மரங்கள்! அடர்த்தியான பு கள்! முட்செடிகள்! செடி கொ கள்!...இவைகளை யெல்லாம் தாண்டி கடந்து ஒரு கொடி வழியே வெகு வேகமாகச் சென்று கொண்டிரு தான் பரிவின்பன், தன் ஊழிய னுடன்!

வெய்யோன் உச்சிக்கு நேராக காய்ந்து கொண்டிருந்தான். கொடிய வெயில்! அதிக தாகமா யிருந்தது அவர்களுக்கு! அங் ஒரு கிணறு காணப்பட்டது. இரு வரும் கிணறு நோக்கிச் செல்லலா யினர்! அக் கிணற்றையடுத்து ஒரு புன்னை மரம் அதன் தண்ணிழலில் ஒரு கிழவன் உட்கார்ந்து கொண் டிருந்தான்.

எண்ணெயை அனேக நாட்களாகக் காணாத தலைமயிர்! துக்கக் குறியென வளர்ந்திருக்கும் கருந்தாடி! வருத்தத்தை வெளிப்படுத்தும் குழிவிழுந்த கண்கள்! உள்ள வேதனையைக் காட்டும் இளைத்த உடல்!...அவன் கைவிரல்கள் ஒவ்வொன்றும் அரையடிக்குமேற்பட்டு நீண்டிருந்தன!! பரிதாபச் சின்னமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தான் அக் கிழவன்.

பரிவின்பனும் அவன் ஊழியனும் கிணற்றையடைந்தனர். இருவரும் அந்தக் கிழவனை விறைக்க விறைக்கப் பார்த்தனர். அவன், அவர்களைச் சட்டை செய்யாதிருந்தான் சிறிது நேரம்! பின் வேதனையோடு அவர்களைப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டான்!

பரிவின்பனும் அவன் ஊழியனும் கிணற்றிலிறங்கினர் தண்ணீர் குடிக்க! ஊழியன் தண்ணீர்குடித்து விட்டு மேலேறிவந்தான்!

"ஏய், இந்தாப்பா!...கொஞ்சம் தூரப் போய் உட்காரு!..." பரிவின்பனின் ஊழியன் கிழவனைப் பார்த்துச் சொன்னான். கிழவன் கோபத்தோடு முறைத்துப் பார்த்தான்!

"இந்தாப்பா! உன்னைத்தான்!"என்றான் மீண்டும்!

"என்ன ஐயா!...நிழல் உமக்கு மட்டும்தான் சொந்தமா? ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக் களிக்கும் அன்பு நிழலை, அவன் அடைய தடுக்கும் ஆட்கள் தான் உலகில் உளளார்களென்றிருந்தேன். ஒரு மரம் ஒரு மனிதனுக்குத் தரும் நிழலை அம்மனிதன் அடைய முடியாமற் செய்யும் கொடுமையே உருவான சில மனிதர்களும் கூட இருக்கிறார்களா?!—ஏன் இருக்க மாட்டார்கள்?" சற்று உக்கிரமாகப் பேசினான் கிழவன்! உட்கார்ந்துகொண்டே!

"என்ன அது உதயா!"—கிணற்றினுள்ளிருந்து கொண்டே பரிவின்பன் கேட்டான்.

"ஒன்றுமில்லை ஒரு குஷ்டரோகி, சாப்பிடுமிடத்தில் உட்கார்ந்து கொண்டு..."உதயன் வார்த்தையை முடிக்கவில்லை.

"ஆ! என்ன சொன்னாய்?...மடையா! முட்டாள்! அயோக்கியனே!..குஷ்டரோகி! குஷ்டரோகி! யாரடா குஷ்டரோகி? நானா? நானா குஷ்டரோகி?...நீ ஒரு வீரனடா முட்டாளே? வயதில் மூத்த என்னை "ஏய்" என்றாய். பொறுத்துக்கொண்டு பேசாமலிருந்தேன். இப்பொழுது என்னைக் குஷ்டரோகி என்று கூறுகிறாய்?......ஏன் கூறமாட்டாய்?...ஏன் நீ என்னைக் குஷ்டரோகியாகக் கொள்ளமாட்டாய்?—மனிதன் நஞ்சை நல்லமிர்தமாக மதிக்கும் பொழுது!—அறிவிலியை அறிஞனை எண்ணும பொழுது!......

குஷ்டரோகி!...

போதும்! போதும்! இந்த வாழ்க்கை எனக்குப் போதும்! பிச்சைக்காரன்! பைத்தியக்காரன்! குஷ்டரோகி!......இந்தப் பட்டங்களையெல்லாம் பெற்றுவிட்டேன்!......போதும்!...சாவே! நீ ஏன் என்னைக் கண்டஞ்சி ஓடுகிறாய்?...வா! வா! என்னை அணைத்துக்கொள்!"......

டேய் அய்யோக்கியப் பயலே! என்னை மரியாதையில்லாமல் பேசினாய்! இப்பொழுது உன் உடைவாளால் என்னைக் குத்திக்கொன்றுவிடு!......ம்...... அந்தக் கைங்கர்யத்தைத் தயவு செய்து செய்துவிடு!.." கிழவன் ஆவேசத்தோடு முழக்கமிட்டான்! உதயன் ஒன்றும் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

பரிவின்பன் அவசரம் அவசரமாகக்கிணற்றினுள்ளிருந்து வெளியே ஓடி வந்தான்.

"உதயா!...என்ன? என்ன?...பெரியவரை என்ன சொல்லிவிட்டாய்?......பெரியவரே!...அவன் இளைஞன் ஏதோ அறியாமல் உளறிவிட்டான். பொறுத்தருளுங்கள் பெரியவரே!...மன்றாடிக் கேட்கிறேன்!...உட்காருங்கள்! சாப்பிடலாம்!......"

பரிவோடு பேசினான் பரிவின்பன். கிழவன் அவன் முகத்தை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பரிவின்பன் கிழவனைத் தாங்கி உட்கார வைத்தான்.

"பெரியவரே!...தண்ணீர் வேண்டுமா?......" என்றார்.

"வேண்டாம்!...நீ யாரப்பா!..." என்று கேட்டான் கிழவன்.

"நான் நெய்த நாட்டுத் தளபதி! பரிவின்பன் என்பது என் பெயர்!"

"நெய்த நாட்டுத் தளபதியா?..." இலேசாகச் சிரித்தான் கிழவன்.

"இப்பொழுது எங்கே செல்கிறாயப்பா!..."—தொடர்ந்தான்.

"பாலைக்கு! அந்நாட்டு அரசன் பாஷாண பூபதியின் மகள் பிறந்த தின விழாக் கொண்டாட்டத்திற்கு நெய்த நாட்டின் பிரதிநிதியாக!..."

"பாஷாண பூபதி! பிறந்த தின விழாக் கொண்டாட்டம்!..." விழிகளை உருட்டி உக்கிரமாகப் பேசினான் கிழவன்.

"ஆம்..." என்றான் பரிவின்பன்.

"பரிவின்பா! பாலைநாட்டிற்கா செல்கிறாய்?......செல்!......உன் போன்ற இளைஞர்கள் பலர் கூடினால்தான் பாலை நாட்டு நரியை வீழ்த்த முடியும்!...முல்லையிலே — ஆம். என் தாய் நாட்டிலே ஒரு மூர்க்கன்! பூசுரன்! இங்குப் பாலையிலும் இப்பூசுரன்! குறிஞ்சியும் மருதமும் அவர்கள் கைப்பாவைகளாக உள்ளன! அவர்கள் நெருங்க முடியாமலிருப்பது நெய்தல் நாடு தான்!......ஆம்......நீங்கள் தான் குறிஞ்சி மருதம் ஆகியவற்றின் உதவியோடு பாலையிலும், முல்லையிலும் உள்ள வஞ்சகர்களை வீழ்த்த வேண்டும்!......" கிழவன் இன்னும் ஏதேதோ சம்பந்தமில்லாமல் வார்த்தைகளைத் தொகுத்துப் பேசினான்.

"பெரியவரே! ஒன்று கேட்கிறேன்! கோபித்துக் கொள்ளாதீர்கள்!...தாங்கள்?..........."

"நானா?...வஞ்சகர்களால் பஞ்சத்தாண்டியானவன்! சூழ்ச்சிக்காரர்களின் சதி திட்டங்களால் வீழ்ச்சியடைந்தவன்! அழிக்கப்பட்ட சித்திரம்! இடிந்த கோட்டை! இனத்தின் இழிநிலையைக் குறிக்கும் சின்னம்! வேதனையில் வடித்த உருவம்!..."

"பெரியவரே!.....விளங்கவில்லையே!..."

"விளங்காது பரிவின்பா! விளங்காது!...பல பரம இரகசியங்கள் விளங்காமலிருந்து வருகின்றன! அவை இனியும் விளங்காமலிருக்கக் கூடாதென்பதுதான் என் எண்ணம்! ஆம். அவற்றை மக்களுக்கு விளக்கிவிட்ட பின்தான் என் மனத்தில் ஓரளவு அமைதியாவது ஏற்படும்!...பரிவின்பா! உன்னிடம் அந்த விஷயங்களெல்லாவற்றையும் விளக்கி விவரமாகக் கூறுகிறேன். கேட்டுக்கொள்! அதைக் கேட்டுக்கொண்ட பின் நான் சொல்கிறபடி நீ செய்யவேண்டும். ஏன்? நான் சொல்வதற்கு முன்னதாகவே நீ அதைச் செய்யத் துடிப்பாய்!..."

"பெரியவரே! அந்தவிஷயங்களையெல்லாம் விளக்கிக் கூறுவதற்கு முன்னதாகச் சாப்பிட்டுவிடுங்கள்!" என்றான் பரிவின்பன்.

"பெரியவரே! நான் உங்களைத் தவறாகப்பேசிவிட்டேன்! மன்னியுங்கள்!"—மன்னிப்பு வேண்டினான் உதயன். கிழவன் இலேசாகச் சிரித்தான்.

பிறகு மூவரும் உணவருந்தினர்.

"பெரியவரே! அந்த விஷயம்?......"—பரிவின்பன் கேட்டான்.

"ஆம். அவைகள் யாவற்றையும் உனக்கு விளக்கமாகக் கூறுகிறேன். வீணர்கள் விவேகிகளைப் போல வேடம் பூண்டு நடத்திய துரோக நாடகங்களைப் பற்றிச் சொல்கிறேன்! — வேதனை மூச்சோடு!......கேட்டுக்கொள்!......"

கிழவன் தன் சோகச் சரித்திரத்தை—துரோகிகளின் திருவிளையாடலை—வஞ்சகர்களின் கபட நாடகத்தை—வீணர்களின் சதியால் வீழ்ச்சியடைந்த தன் நாட்டின் வர

(13-ம் பக்கம் பார்க்க)




ited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Print
147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons)